DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

S.T.C–340/2022

Prosecution witness – PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.ராஜகனி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 present)
13.10.2025– 11.50 AM
<u>முதல் விசாரணை</u>:–

1. நான் பி.கீரந்தை கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகள் தெரியும் அவர்கள் அனைவரும் உள்ளூரை சேர்ந்தவர்கள்.

2. சுமார் 3,4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை எனது அம்மா வீட்டிற்கு சென்றேன். அப்போது எனது அம்மா தண்ணீர் குழாயில் தண்ணீர் பிடிப்பதற்காக சென்றார். ஊர்க்காரர்கள் தண்ணீர் குழாயில் சண்டை நடந்ததாக சொன்னார்கள். ராஜேஸ்வரி என்பவருக்கும், மகேஷ்வரி மற்றும் சாந்தி ஆகியோருக்கிடையே சண்டை நடந்ததாக சொன்னார்கள். சண்டையில் ராஜேஸ்வரிக்கு காயம் ஏற்பட்டதாக சொன்னார்கள். காதில் காயம்பட்டதாக சொன்னார்கள். காயம்பட்ட ராஜேஸ்வரியை நான் சம்பவ இடத்திற்கு அருகில் வைத்து பார்த்தேன்.

3. கூட்டமாக இருந்தார்கள். ஆஜர் எதிரிகள் இருவரும் இருந்தார்களா என்று நான் பார்க்கவில்லை. ராஜேஸ்வரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். சம்பவத்திற்கு மறுநாள் போலீசார் ஊருக்கு வந்து விசாரித்தார்கள். ராாஜேஸ்வரி என்பவரது வீட்டின் அருகில் விசாரித்தார்கள் நான் அங்கு இருந்ததால் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னுடன் ஜெயசக்தி என்பவரும் இருந்தார். பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம்

என்னுடையது. ஜெயசக்தியும் அதில் கையொப்பம் செய்தார். ஜெயசக்தி முதலில் கையொப்பம் செய்தார். பின்னர் நான் கையொப்பம் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். என்னை போலீசார் விசாரித்தார்கள்

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

ராஜேஸ்வரிக்கும், சாந்தி மகேஷ்வரிக்கும் என்ன சண்டை நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியும் என்றால் நான் கடைசியாக சென்றேன். என்ன சண்டை என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சண்டை முடிந்த பிறகு சென்றேன். போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. போலீசாரும் எனது சித்தப்பாவும் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் அந்த பேப்பரில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

ராஜேஸ்வரிக்கும், சாந்தி மகேஷ்வரிக்கும் எதுவும் முன்விரோதம் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் புகார்தாரராகிய ராஜேஸ்வரி எனக்கு என்ன உறவு முறை என்றால் சித்தி உறவு முறை. புகார்தாரர் எனது சித்தி என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி அரசு, எதிர் தரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் கூறிய விபரங்களை நான் சொல்லச் சொல்ல தட்டச்சர் தட்டச்சு செய்த விபரங்கள் சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மா.உ.ம.நீ.ந, கடலாடி